உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௬.] விரோதி௵ கார்த்திகைமீ. [பகுதி-௧.

Vol. 46. November—December 1949 No. I.

உள்ளுறை.

காப்பிய-உவமை:—திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A.B L. ௧—௧௮

உலகியலும் இலக்கியமும்:—திரு. சி. கணேசையரவர்கள் ௧௯—௨௪

திருக்குருகூர்த் திருப்பணிமாலை:—பத்திராசிரியர் ௨௫—௩௬

பழையகொள்கை அழிந்தது:—திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள்; B.A., B L. ௩௭—௪௦

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1949.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணன்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪௬.] விரோதி௵ கார்த்திகை௴ [பகுதி-௧.

Vol. 46. November—December 1949 No. I.

காப்பிய — உவமை *

[உயர்திரு. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.]

காப்பியமாவது யாது? கவிஞன் இயற்றிய கவிதைகளால் அமைந்த எல்லா நூல்களையும் நாம் காப்பியம் என்று சொல்லுவதில்லை; குறிப்பிட்ட ஒரு செய்யுளிலக்கியவகையையே காப்பியம் என்கிறோம். உதாரணமாக: சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலியன காப்பியங்கள். சங்கநூல்கள் என்று வழங்குகிற பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பின்வந்த திருக்குறள் முதலியவை காப்பியங்கள் அல்ல. முற்கூறிய காப்பியவகைகளில்வரும் உவமைகளைப்பற்றியதே இக்கட்டுரை.

உவமை என்பது யாது? ஒருபொருளை வேறொன்றினோடு ஏதேனும் ஒருவகையில் ஒப்பிட்டுக்கூறுவதுதான் உவமை. 'பொன்போல் மேனி' (நற்றிணை, 324) என்பதில் மேனியைப் பொன்னோடு ஒப்பிடுதல் உதாரணமாம். கவிதைக்கலையின் முக்கியமான அம்சங்களுள் ஒன்று உவமை. செய்யுளின்பொருளும் வடிவும் உவமையைக்காட்டினும் மிக முக்கியமே ஆனால் அப்பொருளைப் புஷ்டி

---

* இக்கட்டுரையின் சுருக்கம், சென்னை அகிய இந்திய ரேடியோவில் 17—8—49ல் ஒலிபரப்பப்பட்டது.

*

பெறச்செய்து நிரப்புவதும், அதனைச் சுவைத்து அனுபவிப்பதற்குத் தகுதியாக்குவதும் உவமையாகவே உள்ளது. இக்காரணத்தால் உவமையின் இயல்பை நன்கு விசாரித்துணர்வது மிக அவசியமாகும்.

இவ்வுவமையைக்குறித்து நம் பண்டையாசிரியர்களுள் தொல்காப்பியர் ஓர் இயல் தனிப்பட அமைத்திருக்கிறார். 'நன்மாமயிலின் மென்மெல இயலி' (மதுரைக். 608) எனத் தொழில்பற்றியும், 'மாரியன்ன வண்கை' (புறம். 133) எனப் பயன்பற்றியும், 'துடிபோலும் இடை' என வடிவுபற்றியும், 'தளிர் ஏர் மேனி' (நெடுநல். 148) என நிறம்பற்றியும் உவமைகள் வரும். உவமிக்கும்பொருளை உவமானம் என்றும், உவமிக்கப்படும்பொருளை உவமேயம் என்றும் கூறுவர். தொழில் பயன் முதலியன ஒப்புமைக்குணங்களாம். உவமேயத்தைக்காட்டிலும் உவமானம் உயர்ந்ததாகவே இருக்கும்.

என்ன என்ன நோக்கத்தோடு உவமை தோன்றும்? சிறப்பு, நலன், காதல், வலி என்ற நான்கினையும் நோக்கமாகக்கொண்டு இது தோன்றும். இந்நோக்கங்களை 'நிலைக்களம்' என்றனர் தொல்காப்பியர். 'உயிர்க்குயிரன்னர்' (குறுந். 218) என்ற இடத்திலே காதலை நிலைக்களமாகக்கொண்டு உவமை பிறந்தது. இவ்வாறே மற்றவைகளையும் தெரிந்துகொள்ளலாம். இவைகளேயன்றி, உவமேயம் இழிவுறுதலும் ஒரு நிலைக்களமாகும். 'அரவுநுங்கு மதியின் நுதலொளி கரப்ப' (அகம். 313; 'பாம்பு விழுங்கிய சந்திரனைப்போல நெற்றியொளி மழுங்க') என்ற இடத்திலே நெற்றியின் ஒளி மாய்ந்துவிடுதலுக்கு வரும் உவமானம் இந்நிலைக்களத்திற்கு உதாரணமாம்.

இவ்வாறு ஒப்புமைக்குணங்களையும் நிலைக்களங்களையும் விளக்கியதனோடு, சில உவமைகளையும் உவமைகளின் ஆட்சி நியமங்களையும் தொல்காப்பியர் கூறியுள்ளார். உவமைவகைகளுள்

சுட்டிக்கூறுவுவமம், உள்ளுறையுவமம் முதலியன குறிக்கத்தக்கன. உள்ளுறையுவமம் அல்லது உவமப்போலி வடமொழியில் அந்யாபதேசம் என்று கூறப்படும்.

தன்பார்ப்புத் தின்னும் அன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவனூ ரென்ப (ஐங்குறு. 41)

'தன்குட்டியைத்தின்னும் அன்பில்லாத முதலை' என்பது கொடுமை மிக்க தலைவனைக் குறிக்கும் என்றும், வெண்பூம்பொய்கை என்பது தலைவன்பிரிவால் வருந்தும் தலைவியின் பசப்புநிறத்தைக் குறிக்கும் என்றும் கொள்வர். இதனை உவமைவகை என்றல் பொருத்தமாகுமா என்று பலரும் ஐயுறலாம். பிறமொழிக்குரிய அணியிலக்கணங்களில் இந்த உவமைவகை காணப்படுவதாகத்தெரியவில்லை. ஆனால் தலைவன் தலைவியது இயல்புகளையுணர்த்தும் ஒரு குறிப்பு ஊர்க்குத்தந்துள்ள அடைமொழியில் உள்ளது. இக்குறிப்பு உவமையை அடிப்படையாகக்கொண்டது. இவ்வாறு வருதற்குப் பிற்காலத்தார் கருத்துடையடைகொளியெனப் பெயரிடுவர்.

உவமையை ஆளும் நியதிகளில் தொல்காப்பியர்கூறும் சில விஷயங்கள் நமக்கு வியப்பை உண்டுபண்ணலாம். தலைவிகூறும் உவமம் அவளது நிலத்தில் அவளறிந்தபொருள்கள்பற்றியே இருத்தல்வேண்டும்; தோழிகூறும் உவமம் அந்நிலத்துள்ள எல்லாப்பொருள்கள்பற்றியும் இருக்கலாம்; தலைவன்கூறும் உவமம் அவனது தலைமைதோற்றுவதாய் இருக்கவேண்டுமாம். இவை போன்ற நியதிகட்குத் தக்க காரணமும் உளது. இந்நியதிகள் காதல்பற்றிய செய்யுட்களுக்கே உரிமையுடையன. நாடகநெறியில் நோக்கினால் இக்காரணம் தெற்றெனப் புலப்படும். உவமையை ஆளும் பொதுநியதிகளுள் இவற்றிற்கு இடமில்லை.

பிறிதொரு முக்கியமான விஷயத்தையும் தொல்காப்பியர் உணர்த்துகிறார். உருவகத்தையும் உவமையிலேயே அடக்கிவிடு

கின்றனர். உண்மையிலே எல்லா அணிகளும் உவமையைத்தான் அடிப்படையாய்க்கொண்டன. இக்காரணத்தாலேயே,

உவமை யென்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே

என்று கூறப்படுகிறது. இக்கருத்தை மேற்கொண்டே தொல்காப்பியரும் உவமையைப்பற்றிமட்டும் விவரித்து, மற்றை அணிகளைக்குறித்து யாதும் கூறுதுவிடுத்தனர்.

தொல்காப்பியர் கூறிய உவமையியல்புகள் அதன் அடிப்படையான உண்மைகளை நன்ருகப் பாகுபடுத்தியுணர்த்துகின்றன. இந்த இயல்புகள் காப்பியங்கள் உள்பட எல்லாக்கவிதைகளிலும் காணப்படுவனவே. எனினும், இவைகள் சங்கச்செய்யுட்களில் மிகத் தெளிவாக விளங்குகின்றன. நேர்மையும், சுருக்கமும், தெளிவும் இச்செய்யுட்களின் முக்கியமான இயல்புகள். இவற்றில்வரும் காதல் நிகழ்ச்சிகளிலும் நேர்மையே காணப்படுகிறது. காதல் - நடிப்புகள் இவற்றில் இல்லை. அக்காலத்துப் புலவர்களது உள்ளம் அதியுக்தியால் மலினமடையவில்லை. ஆகவே, இயற்கைப்பொருள்களை நேரிற்கண்டு அனுபவித்துத் தம் கவிதைகளில் அமைத்தனர். சில இடங்களில் சாதாரண இயற்கைப்பொருளை மற்ருெரு சாதாரண இயற்கைப்பொருளோடு ஒப்பிட்டனர். மழைநீரால் மாசு நீங்கித் தூயதாய்க்கிடக்கும் பாறை, 'மாசறக்கழீஇய யானைபோல' (குறுந். 13) உள்ளதாம். வேறுசில இடங்களில் சாதாரண இயற்கைக்காட்சியால் அரிய உண்மை விளக்கப்படுகிறது.

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே (குறுந். 18)

சிறிய மரக்கிளையிலே பெரிய பழங்கள் தொங்கிக்கிடப்பது நாம்

தினசரி அனுபவத்தில் காண்பதே. இக்காட்சியைப்போலத் தலைவியின் உயிரானது மிகச்சிறியதாம்; அதனிடத்தே முதிர்ந்து பழுத்துத்தொங்கும் காதற்கனியானது தாங்கமுடியாத பாரத்தையுடையதாய்ப் பெரிதாயுள்ளதாம். மற்றும் சில இடங்களில் சாதாரணமாய்க் கவனிக்கப்படாத இயற்கையைப் புலவர்கள் கூர்ந்து அறிந்து தம் கவிதைகளில் அமைத்துள்ளார்கள். உதாரணமாக 'அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து' (நீர்முள்ளியின் முள் அணிலின் பல்லை ஒத்துள்ளது. குறுந். 49) எனக்கூறப்படுகிறது. இன்னும் சில இடங்களில் உவமானமும் உவமேயமும் பலரும் கண்டுள்ள பொருள்களேயாயினும், ஒப்புமைகாணுதற்கு அரியதாயிருக்கும். மனத்தேயுள்ள உணர்ச்சியொற்றுமையால் புலவர்கள் ஒப்புமையைக் கற்பித்துள்ளார்கள்.

> பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
> குடுமித் தலைய மன்ற
> நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே (ஐங்குறு. 232)

> வஞ்சி யன்னஎன் நலந்தந்து சென்மே (அகம். 396)

> தொண்டி யன்ன பணைத்தோள்
> ஒண்டொடி யரிவை (ஐங்குறு. 171)

என்பன உதாரணங்கள். இவற்றுள் 'வஞ்சியன்ன என் நலந்தந்து சென்மே' என்றால், 'நீ கவர்ந்துகொண்ட எனது அழகு வஞ்சிமாநகரின் பேரழகுபோன்றது; அதனை எனக்குமீண்டும் தந்துவிட்டுச் செல்வாயாக' என்பது கருத்து.

பூவுலகத்துப் பொருள்களேயன்றி, யாவர்க்கும் விளங்கி விண்ணுலகத்திலே தோன்றும் பொருளும் உவமத்திற்கு உரியதாகவே இப்புலவர்களால் கொள்ளப்பட்டது.

> ஞாயி றனையை நின் பகைவர்க்குத்
> திங்கள் அனையை எம்மனோர்க்கே (புறம். 114)

'அரசே! உனது பகைவரைச் சூரியன்போலக் காய்ந்து தகித்தும், உனது நிழலில்வாழும் எங்கள்போல்வாருக்குச் சந்திரன்போலக் குளிர்ந்தும் நீ உள்ளாய்' என்னும் கருத்துப்பட இச்செய்யுளடிகள் அமைந்துள்ளன. இங்கே கூறியன கவிஞனது நேரடியான அனுபவத்தினின்றும் பிறந்தன.

இங்ஙனம் பிறவாது மரபுவழிப்பட்ட உவமைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. 'குவளையுண்கண்' (அகம். 138. நற். 77), 'பொன்னேர் மேனி' (ஐங்குறு. 388), 'முத்தேர் வெண்பல்' (ஐங்குறு. 380), 'அவிரறல் கடுக்குங் கூந்தல்' (புறம். 25), 'ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய்' (குறுந். 300) என்பவை உதாரணங்கள்.

அனுபவத்திற்கண்ட பொருள்களையேயன்றிக் கதைகளிற் கேட்கப்பட்ட பொருள்களையும் உவமமாக எடுத்தாளுதலில் இச் சங்கப்புலவர்கள் பின்வாங்கியதில்லை. 'இருதலைப் புள்ளின் ஓருயிரம்மே' (அகம். 12) என்பது உதாரணம்.

மேலே விவரித்த உவமைவகைகளை ஆண்ட முற்சங்ககாலத்திற்குப்பின், உவமைகளின் இயல்பு சிறிது விரிவுபெறலாயிற்று. இதிகாசம் முதலியவற்றினின்று வரலாறுகளை உவமப்பொருளாகக் கொண்டு, ஒப்புமைக்குணங்களைத் தொடர்ந்துகூறி, உவமேயத்தை மனத்தில் பதியவைப்பதற்குக் கவிஞர்கள் முயன்றார்கள். கலித்தொகையில்,

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கை கீழ்ப்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல
உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடு புய்க்கல்லா துழக்கும் நாடகேள். (கலித். 38)

என வருவது ஒரு தக்க உதாரணமாம். இங்கே வேங்கைமரத்தின் அடிமூலத்தை மதயானை தன் கொம்புகளால் குத்திப்பெயர்க்க முயன்றதில், அதன் கொம்பு ஆழத்தில் பாய்ந்து மீண்டும் அதனால் எடுக்கமுடியாத துன்பநிலைக்கு, இராவணன் இமையமலையை அடியோடு பெயர்த்தெடுக்க எண்ணி, அம்மலையின்கீழாகப் புகவிட்ட கரங்களை மீண்டும் எடுக்க முயன்று வருந்திநிற்கும் நிலை ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.* இதுபோன்ற உவமைகள் பல. பரிபாடலிலும் இவ்வகையுவமைவிரிவுகள் பல பயின்றுவருகின்றன.

இந்நிலையிலே நாம் காவியவுலகிற் பிரவேசித்துவிடுகிறோம். காவியம் என்ற அளவிலே கதை என்ற நூற்பொருளும் கலையுணர்ச்சி என்ற கதையை நிகழ்த்தும் அழகுநெறியும் மேம்பட்டுவிடுகின்றன. இதனால் பௌராணிகஉவமையை அமைக்கும்பொழுது இடத்திற்குத்தக்கபடி சுருக்கிக்கூறவேண்டும்நியமம் ஏற்பட்டது. உதயணன் பெருங்கதையில் (உஞ்சை. 53, 14-17)

கருவரை மிசைநின் றிருநிலத் திழிதரும்
உமையொடு புணர்ந்த இமையா நாட்டத்துக்
கண்ணணங் கவிரொளிக் கடவுள் போல
மத்தக மருங்கில் தத்துவனர் இழிதர

என வருகிறது. 'மலையினின்றும் சிவபிரான் உமையோடு பூமியில் இழிந்ததுபோல' என்பது உவமை. பௌராணிக உவமையைச் சுருக்கியபோதிலும் உவமைமுதலிய பல அணிகள் தொடர்ந்து நிகழ்தலை இக்காவியக்கவிஞரும் விரும்பினர். எனவே இவ்வுவமையைத்தொடர்ந்து,

---

*இங்குக்குறித்தது உத்தரகாண்டத்திற் காணும் வரலாறு. இக்காண்டம் மிகப் பிற்பட்டதென்பது அனைவர்க்கும் ஒத்த முடிபு. இதன்கண் வரும் கதைகளைக்குறித்து முற்சங்கநூல்களில் யாதும் காண இயலாது. ஆகவே, கலித்தொகை பிற்சங்ககாலத்தது என்பதற்கு இவ்வுவமையும் ஒரு சான்றாம்.

மருங்குற மண்மிசை வீழின் மற்றென்
இரும்புறத் திருந்தோர்க் கேதமென் றெண்ணி
மல்குநீ ருடுக்கை மண்ணக மடந்தையைப்
பாவடி நிலனுறப் பரப்பி உதயணன்
சேவடி தலையுறச் செய்தது பொறுவென
வணக்கஞ் செய்வது போல மற்றுத்தன்
அணிக்கேழ் பொறிச்செவி யாட லாற்றுது
செங்கேழ்த் குருத்தியின் அங்காந் துயிர்த்தொறும்
பைசொரி பவழம் போலப் படிதாழ்
கைசொரி யுதிரம் கான்றுவந் திழிதர

என மேற் கூறப்படுகின்றது. இங்கே யானை விழும்போது நிகழ்ந்த ஒவ்வொருநிகழ்ச்சிக்கும் தொடர்ந்து உவமைமுதலியன தரப்படுகின்றன. உவமான உவமேயங்கட்குரிய ஒப்புமைக்குணங்களைப் பலபட விரித்துக்கூறுதலும் முற்பட்ட காவியங்களில் காணப்படுகிறது.

நேரியற் சாயல் நிகர்தமக் கில்லாக்
காரிகை கடுநுனைத் தூண்டி லாக
உட்கும் நாணும் ஊரா ணெழுக்கும்
கட்கின் கோலமும் கட்டிரை யாக
இருங்கண் ஞாலத் திளையோ ரீட்டிய
அருங்கல வெறுக்கை யவை மீனுக
வாங்குபு கொள்ளும் வழக்கியல்

என்ற பெருங்கதையடிகள் (இலாவாண. 7, 72 - 78) இதற்கு உதாரணமாம். இங்கே தூண்டிலிட்டு மீன்பிடிக்கும் செயல் விவரத்துடன் உவமையாகத் தொடர்ந்து அமைந்துள்ளது. தனித்தனி உவமைகளை அடுக்கிக்கூறுதலும் பெருங்கதையிற் காணலாம்.

அஞ்செங் தாமரை யகவித ழன்ன
சில்லரித் தடங்கண் மெல்லென மிளிர
மானின் மடப்பெடை மம்மர் எய்த
வேனிற் காலத்துத் தானம் நோக்கி

மணிக்கட் பீலி மாமயிற் பேடை
அணுக்கவின் மென்னடை யனுக்க அசைந்தசைந்து

என்ற அடிகள் (உஞ்சை. 53, 149-154) சான்றாகும்.

இக்காவியத்திற்குப் பிற்படவந்தது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோவடிகள் பெருங்கதையாசிரியரைக் காட்டிலும் சிறந்த கவிஞர். இவர் கூற எடுத்துக்கொண்டதும் ஒருமைநயமும் சுருக்கமுமுடைய சிறந்த கதையாகும். பெருங்கதையைப்போலன்றித் தமிழ்நாட்டில் வழங்கிவந்த ஒரு பழங்கதை. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமென் றோர் மணியாரம்" ஆகிய இவ் வழகிய காவியத்தில் உவமைகள் மிக்க அழகுபெறுகின்றன. பௌராணிக உவமைகள் ஒவ்வொன்றும் உள்ளத்தைக் கனிவிக்கும் அழகிய சித்திரமாக அமைந்து அவற்றின் நலன்களைப் பன்மடங்கு மிகுதிப்படவிளக்கி மனோபாவனையால் உவமேயங்களின் நலன்களை அழகுகனிந்து துளும்பும்படிசெய்கின்றது.

குழவித் திங்கள் இமையவ ரேத்த
அழகொடு முடித்த அருமைத் தாயினும்
உரிதி னின்னோ டுடன்பிறப் புண்மையிற்
பெரியோன் தருக திருநுத லாகென (2 மனையறம். 38-41)

என்ற அடிகளில் பௌராணிகச்செய்தி சித்திரிக்கப்பட்டு ஒப்புமைப் பொருளாகிறது.

அடையார் முனையகத் தமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண் டாகலின்
உருவி லாளன் ஒருபெருங் கருப்புவில்
இருகரும் புருவ மாகென ஈக்க,
மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்
தேவர் கோமான் தெய்வக் காதற்
படைநினக் களிக்க, அதனிடை நினக்கிடையென
அறுமுக வொருவனோர் பெறுமுறை யின்றியும்

இருமுறை காணும் இயல்பினி னன்றே
அஞ்சுடர் நெடுவேல் ஒன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்கண் இரண்டா யீத்தது:
மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே,
அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே ...
மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!
(2. மனையறம். 74 - 79)

என்ற அடிகளில் காதல் உவமையாகக் கனிந்துவிடுகிறது. இவ்வடிகளிற் கண்டவைகளை முறையே புகழுவமை எனவும், தெரிதருதேற்றவுவமை எனவும் அடியார்க்குநல்லார் தமது உரையில் குறித்தனர்.

உவமையையே பெருங்கதை பெரிதும் ஆளுகின்றது; சிலப்பதிகாரம் உவமைகளினும் உருவகத்தையே மிகப் பெரிதும் ஆளுகின்றது. இதனுல் உண்டாகும் சுவை இனிமையாவிழைத்தது போன்றதாகும்.

இங்ஙனம்வரும் உருவகத்தில் அழகும் இனிமையும் ஒன்றேடொன்று போட்டியிடுவதைக் காணலாம்.

அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தல்
பாண்வாய் வண்டு நோதிறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்ப (4, 72 - 76)

என்ற அடிகள் சான்று. இக்காப்பியத்தில் வரும் உவமப்பொருள்கள் பெருங்கதையிற்காட்டினும் மிக விரிவாக வர்ணிக்கப்படுகின்றன. உதாரணமாக,

விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
ஒருதனித் திகிரி யுரவோற் காணேன்
அங்கண் வானத் தணிநிலா விரிக்கும்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
அரைசுகெடுத் தலம்வரும் அல்லற் காலைக்
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
அறைபோகு குடிகளொ டொருதிறம் பற்றி
வலம்படு தானை மன்ன ரில்வழிப்
புலம்பட இறுத்த விருந்தின் மன்னரில்
தாழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்த (4, 1 -13)

எனவரும் அடிகளைக் காட்டலாம். காதலனை மாலைப்பொழுதில் பிரிந்தவர்கள்படுந்துன்பத்தைக்கூறவந்த ஆசிரியர் மாலைக்காலத்தையும் துன்பநிலையையும் முறையே உருவகத்தாலும் உவமையாலும், வர்ணித்துத் தனிப்பட்ட சித்திரமாக அமைத்துவிடுகின்றார். உவமையை மாட்டிவைத்தற்குரிய ஒரு மூலையாணியாகத்தான் காதலனைப்பிரிந்த துன்பச்செய்தி உதவுகிறது. இவ்வாறு அழகாக உவமையை விவரித்துக்கூறுதலே பிரதான நோக்கமாய்க் கதை நிகழ்ச்சியினிடையே அதனை அமைத்தால், அவ்வுவமையை 'இதிகாசஉவமை' (Epic Simile) என்று மேனாட்டறிஞர்கள் தனிப்பட விதந்துகூறுவார்கள்.

சிலப்பதிகாரத்திற்குச் சுமார் ஒருநூற்றாண்டிற்குப்பிற்பட்டுச் சுமார் 9ம் நூற்றாண்டளவில் காவியங்களை விருத்தத்தில் பாடும் வழக்கம் நிலைபெற்றுவிட்டது. சிந்தாமணிக்காவியம் இவ்வாறு விருத்தத்தால் இயன்றது. இவ்வகைச்செய்யுள் நான்குஅடிகள் கொண்டது. சில விருத்தங்கள் மிகச்சிறியவை. இக்காரணங்களால் உவமைகளை விரிவாக அமைத்தல் இயலாததாயிற்று. மிகச்சிறிய வடிவில் உவமைகளைக் கூறவேண்டும் அவசியமும் ஏற்பட்டது.

மாரி மொக்குளின் மாய்ந்து விண்தொழச்
சோர்வில் கொள்கையான் தோற்றம் நீங்கினன் (409)

என்ற இடத்தில் 'மாரிமொக்குளின் மாய்ந்து' என வருதலைக் காணலாம். இதுபோன்ற உவமைகள் பல இடங்களில் வருகின்றன. விருத்தங்களில் எதுகை, மோனை முதலிய கட்டுப்பாடுகள் மிக இருந்தமையால், உவமைகள் சில இடங்களில் மோனையில் அமைந்து அடிகளை நிரப்பியும், சில இடங்களில் எதுகையில் அமைந்து பொருளை மயக்குறுத்தியும் வந்தன.

வெம்ப வூர்ந்துலாம் வேனி லானினே (410)

மக்கள் ஈண்டினர் மடங்கல் மொய்ம்பினர் (414)

என்பனவும்,

விற்பழுத் துமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி மைந்தர்
மற்பழுத் தகன்ற மார்பத் திடங்கொண்டு வைகச் செந்நாச்
சொற்பழுத் தவர்க்கும் ஆண்மை சொல்லலாம் தன்மைத்தன்றிக்
கொற்பழுத் தெரியும் வேலார் கொடுஞ்சிலை குழைவித்தாரே (435)

என்பதும் உதாரணங்களாம்.

இவ்விளைவுகள் இக்காவியம் கையாண்ட விருத்தங்களின் இயல்பினால் தோன்றின. இங்ஙனமன்றி, இதன் ஆசிரியரது ஆற்றல்வகையினாலும் அவர் மேற்கொண்ட நியதிகளாலும் நேர்ந்த விளைவுகள் வேறுசிலவும் உள. அலங்காரநடையையே இவர் தமது காப்பியத்தில் அமைத்துள்ளார். இதனால் இவரது உவமைகள் இயற்கையில் அமைந்தனவல்ல; செயற்கைத்தன்மை இவற்றில் பெரிதும் காணப்படுகின்றது. உள்ளத்துணர்ச்சியின் மேலீட்டினால் பிறவாதபடி உவமைகள் வலிந்து அமைக்கப்படுகின்றன.

உதாரணம்:

பெண்ணெனும் உழலை பாயும் பெருவனப் புடைய நம்பி (713)

வேழவெண் கோட்டு மெல்கோல் தின்றுகூன் குருதி வாளால்
ஆழகா வழித்து நெய்த்தோர் கொப்புளித் தழிந்த மாவின்
சூழ்குடர்க் கண்ணி சூடி நிணத்துகி லுடுத்து வெள்ளென்பு
வாழ்பெற அணிந்து சூர்பேய் ஆடக்கண் டுவந்து நக்கான் (803)

என்பனவாம்.

மேலும், இவரது உவமைகளில் இவரது முந்துநூற்கல்வி புலப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. முன்னோர் மொழிகளைப் பொன்னேபோற் போற்றுதலில் இவர் பெரிதும் ஈடுபட்டவர்.

வெருகு வேட்பச் சிரிப்பனபோல
முகைத்த முல்லை வெய்ய (1651)

என்பது புறநானூற்றில் 117-ஆம் செய்யுட் கருத்தைப் பின்பற்றியது.

வீட்டிடந் தோறும் வில்லக விரல்போற் பொருந்தி நின்று (2118)

என்பது 370-ஆம் குறுந்தொகைச் செய்யுளைக் கருதியது. இங்ஙனம் பல. அன்றியும் மரபுவழிப்பட்ட உவமைகளை இவர் அடிக்கடி எடுத்தாளுகின்றார்.

ஆழியான் ஊர்திப் புள்ளின் அஞ்சிறை யொலியின் நாகம்
மாழ்கிப்பை யவிந்த வண்ணம் (449)

திங்கள் சூழ்ந்தபன் மீனெனச் சென்றெய்தி
நங்கை தவ்வையும் தோழியும் நண்ணினர் (1337)

என்பன உதாரணங்கள். இன்னும் இவர் பலதிறப்பட்ட உவமைகளையும் அடிக்கடி கையாளுகின்றனர். 433, 434 என்ற இரண்டு செய்யுட்களில் 5 உவமைகள் தரப்பட்டுள்ளன. நாற்றைப் பாக்க நட்டால்தான் பயிர் நன்றாக வளரும்; நெருங்கநட்டால் பயிர் செழித்துவளர்வதில்லை. இதுபோலவே, உவமைகளை நெருக்கியமைத்தால் சுவை விளையமாட்டாது. ஒருசில இடங்களில் உவமைகள் மிகை நடிப்பாகக் காட்சிதருகின்றன. பசுநிரைகளைக் கவர்ந்து சென்றமையால் ஆய்க்குலப்பெண்கள் வருத்தமுற்றனர் என்ற செய்தி,

வலைப்படு மானென மஞ்ஞை யெனத்தம்
முலைப்படு முத்தொடு மொய்குழல் வேய்ந்த
தலைப்படு தண்மலர் மாலை பிணங்க
அலைத்த வயிற்றின ராயழு திட்டார் (424)

என வருணிக்கப்படுகிறது. உவமையைப் பலபட விரித்துக்கூறுத லும் இக்காப்பியம் கைக்கொண்ட ஒரு முறையே; ஆனால் அழகிய ஒரு மங்கையைக் கூறுகூறாக அங்கச்சேதம் செய்து பரப்பிவைத்தது போன்ற உணர்ச்சியையே இவ்விரிவுகள் நம்மனத்தில் உண்டாக்கு கின்றன. மிக்க நயம்பட இவைகள் அமைந்த இடங்களும் அங் கங்கே காணலாம்.

தாய்தன் கையின் மெல்லத் தண்ணென் குறங்கின் எறிய
ஆய்பொன் அமளித் துஞ்சும் அணியார் குழவி போலத்
தோயுந் திரைகள் அலைப்பத் தோடார் கமலப் பள்ளி
மேய வகையிற் றுஞ்சும் வெள்ளை யன்னம் காண்மின் (930)

என்பதனைப் பாவனையிற் கண்டு இன்புறலாம்.

இறுதியாக இப்பெருங்கவிஞனது உவமைகள் பல இடங்க ளில் இழிந்த உணர்ச்சிகளை எழுப்புவனவாய்ச் சுவைகெட அமைந் துள்ளன.

கார்விரி மின்னனார் மேற் காமுகர் நெஞ்சின் ஓடுந்
தேர்பரி கடாவித் தேந்தார்ச் சீவகன் அருளிற் போகி (442)

தன்பால் மனையாள் அயலான்றலைக் கண்டு பின்னும்
இன்பா லடிசிற் கிவர்கின்றகைப் பேடி போலாம் (443)

சில்லரிச் சிலம்பின் வள்வார்ச் சிறுபறை கறங்கச் செம்பொன்
அல்குற் றேரணிந்து கொம்மை முலையெனும் புரவி பூட்டி
நல்லெழில் நெடுங்கண் அம்பாப் புருவவில் உருவக் கோலிச்
செல்வப்போர்க் காமன் சேனை செம்மல்மேல் எழுந்ததன்றே (458)

என்பன மேற்கூறியதை உண்மையெனத் தெளிவிக்கின்றன. இவற்றையெல்லாம் நோக்கினால் உவமையும் உருவகமும் பற்றிய அளவில் சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் சிந்தாமணி ஒரு உயர்ந்த படியை எய்தாது தாழ்ந்தபடியில் விழுந்துவிட்டது என்று தான் நாம் கொள்ளுதல்வேண்டும். ஆனால் வேறுபல நலன்கள் இச் சிந்தாமணிக்காவியத்தில் உள்ளன. அவற்றை இங்கே கூறின் அது மற்றொன்று விரித்தலாகும். ஒன்று நாம் நினைவில் வைத்தல் வேண்டும். விருத்தம் உவமையைக் காட்டிலும் உருவகத்திற்கு

மிகவும் ஏற்ற செய்யுளினமாகும். அதனைப் பிரசாரத்திற்குக் கொண்டுவந்தது சிந்தாமணியே. இக்காவியத்தில் இழிவுபட்ட சுவை காணப்படுமாயின் அதற்குக்காரணம் அக்காலத்தவர் அச்சுவையை இழிவெனக்கருதாது விரும்பிபேற்றனர் என்று துணிதலே பொருந்தும்.

சிந்தாமணி தோன்றிய இரண்டுநூற்றுண்டுகளுக்குப்பின் கம்பன் பிறந்து, தான் காவியநலன்களின்சிகரத்தை எய்தியது போலவே, உவமைநலன்களின்சிகரத்தையும் எய்திவிட்டான். இவனது உவமைநலன்களை இனி நோக்குவோம்.

தொல்காப்பியர்காலத்திற்குப்பின் உவமை முதலிய அலங்காரத்தைக்குறித்து வடமொழியிலும் தமிழிலும் பலபல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் இவைகளால் தொல்காப்பியர் கூறியுள்ளனவற்றைக்காட்டிலும் சிறப்புடையதாக ஒன்றும் விளங்கிவிடவில்லையென்றே சொல்லுதல்வேண்டும். இப்பின்னூல்களை இயற்றிய ஆசிரியர்கள் பலவாறுகப் பெயர்களையமைத்தலொன்றையே செய்துள்ளார்கள். ஆகவே தொல்காப்பியர்கருத்துக்களைத் தான் நாம் ஆதாரமாகக்கொள்ளவேண்டும். அவர்,

> சிறப்பே நலனே காதல் வலியோடு
> அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப
> கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்.

என இரண்டுசூத்திரங்களை அமைத்துள்ளார் என்பது முன்பே குறிக்கப்பட்டது. இவற்றுல் உவமேயத்தின் சிறப்புக்களை விளக்குதலே உவமையின் அடிப்பட்ட கருத்தாகும். ஆனால் கவிஞர்கள் இவ்வாறு விளக்குதலோடுமட்டும் நின்றுவிடவில்லை. இவர்களுடைய வழக்காற்றில் பற்பல புதுக்கருத்துக்களையும் உவமை பற்றிமேற்கொண்டனர். இவ்வழக்காறுகள் இவர்கள் இயற்றியுள்ள கவிதைகளிலிருந்துதான் தெரிந்துகொள்ளக்கூடியன.

முதலாவது உவமானம் உவமேயத்திற்குத் தகுதியுடையதாக இருத்தல்வேண்டும். ஒருபொருளுக்குப் பல உவமானங்கள் கையாளப்படுமாயின் அவற்றுள் ஒவ்வொன்றும் அப்பொருளுக்குப்

பொருந்தியிருத்தலோடு அவைகள்தம்மினும் ஒரு தகுதிச்சேர்க்கை இருத்தல்வேண்டும். அன்றியும் காவியத்தில் மற்ற இடங்களில் அமைந்துகிடக்கும் அப்பொருளின் இயல்புடன் உவமானம் நன்கு பொருத்தமுறுதலும்வேண்டும். உதாரணமாக இராமன் என்ற உவமேயப்பொருளை எடுத்துக்கொள்வோம். இவனது இயல்பு கம்பனது இராமாயணத்தில் பலஇடங்களிலும் வெளியாகின்றது. அவ்வாறு வெளியாகும் இயல்பிற்குத் தக்கபடியே உவமானமும் அமைதல்வேண்டும். இராமன் அனைவருக்கும் உயிர் போன்றவன். இவ்வாறு கம்பன் பல இடங்களிலும் வருணித்துள்ளான். தசரதன் தன்னுடைய உயிர் என்று இவனைக் கருதுகிறான். இவன் நீங்கினால் ஆவிநீங்கியதோடு ஒக்கும் என்றும் நினைக்கிறான். கதையின் நிகழ்ச்சியிலும் இராமன் இவனைவிட்டுப் பிரிந்த துக்கம் ஆற்றமாட்டாது இவனது உயிரும் நீங்குகின்றது. இந்தக்கருத்தோடு இயையவே இராமனைக்குறித்துத் தசரதன் கூறும் இடங்களிலெல்லாம் உவமானங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். அயோத்தியிலுள்ள மக்களும் பிறரும் இராமனைக்குறித்துக்கூறும் இடங்களிலும் இத்தகைய உவமம் கையாளப்படுகிறது.

ஓவி னல்லுயிர் உயிர்ப்பினோ டுடல்பதைத் துலைய
மேவு நல்லழ கெழில்கெட விம்மல்நோய் விம்மத்
தாவில் ஐம்பொறி மறுகுறத் தயரதன் என்ன
ஆவி நீக்கின்ற தொத்ததவ் வயோத்திமா நகரம்   (நகர்நீங்கு. 216)

இரண்டாவதாக உவமங்கள், பொறியின்பம் சிறந்து விளங்கும் படியாகவும் அமையலாம். உதாரணமாக,

சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன்   (கைகேயி சூழ். 50)

கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லாம் அருளினள் அழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கும் மாத ரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றே
                (கோலங்காண். 19)

என்ற செய்யுட்களைக் கூறலாம்.

மூன்றாவதாக, உவமைகள் உள்ளத்தின் உணர்ச்சியில் ஊறி வெளிவருதல்வேண்டும். அப்பொழுதுதான் உவமானம் உவமேயக் காட்சியை அழகுறுத்தி, அதற்கு அநுகூலமான அடிநிலமாக (Background) அமைந்து நிற்கும். இவ்வாறு உணர்ச்சியில் ஊறி வந்த உவமானங்கள் கம்பனது பெருங்காவியத்தில் பல இடங்களிற் காணலாம். ஒரு செய்யுள் மிகப்பிரசித்தமானது.

இப்பொழு தெம்மனோரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத் திராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா

(கைகேயி சூழ். 108)

நான்காவதாக, கவித்வ உண்மையை நன்கு முற்றும் தெரித்தற்கே உவமைகள் கையாளப்படுதல்வேண்டும். பொதுப்பட வசனத்தில் பொருள்களைப் பகுத்துப்பகுத்து உணர்கிறோம். இதனால், அவற்றின் உருவம் முழுமையும் நமக்குப் புலப்படுவதில்லை. உவமையினால் அவற்றை நாம் நன்கு தெரிந்துகொள்ளுதல்கூடும். இவ்வாறு தெரித்தற்கு அநுகூலமாகவே உவமைகள் அமைதல்வேண்டும். ஓர் உவமையினால் முழுதும் அறியக்கூடாதிருக்குமானால், பல உவமைகளையும் அடுத்தடுத்து ஆண்டு, பொருளின் உண்மையியல்பை உயர்ந்த கவிஞர்கள் நமக்குத் தெரிவிப்பார்கள். இவ்வுவமைகள் அழகின்மீது அழகாய் அமைந்து பெரியதோர் இன்பம்பயக்கும். இவ்வகை ஆட்சியும் அழகும் கம்பனது காவியத்திற் பல இடங்களில் உள்ளன.

கோணுதற் கமைந்த கோலப் புருவம்போல் திரையுங் கூடப்
பூணுதற் கினிய முத்தின் பொலிமணல் பரந்த வைப்பின்
காணுதற் கினிய நீளவெண்மையிற் கருமை காட்டி
வாணுதற் சீதை கண்ணின் மணியென வயங்கு வானை;

படர்மழை சுமந்த காலைப் பகர்வரும் அமரர் கோமான்
அடர்சிலை துறந்த தென்ன ஆரந்தீர் மார்பி னானைக்
கடல்கடை மத்திற் பாம்பு கழற்றிய தென்னக் காசின்
சுடரொளி வலயந் தீர்ந்த சுந்தரத் தோளி னானை;

வீரனை நோக்கி யங்கம் மென்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்கண் அஞ்சன மலையன் ருகில்
கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கும் நீதி அறநிறம் கரிதோ என்ருன்
(விபீடணன். 134 - 137)

என்பன உதாரணங்கள்.

இங்ஙனமாகப் பல நியதிகளையும் கம்பன் தனது கவித்வ திருஷ்டியால் கண்டு தனது மகாகாவியத்தில் கையாண்டுள்ளான். இப்பெருங்கவிஞனது உவமைகளைமட்டும் தனிப்பட நாம் ஆராய்ந்தால், எத்தனையோ அரிய உண்மைகள் நமக்குப் புலப்படும். உவமை கவிதையின் அந்தராத்மா என்று சொல்லமுடியாது. ஆனல், அவ் அந்தராத்மா இயங்கி உலவும் வளமிக்க சோலையாக அது கருதத் தக்கது. இச்சிறப்பு கம்பன் ஆளும் உவமைகளில் நன்கு விளங்குகிறது.

கம்பனது காவியத்திற்குப் பிற்பாடு காவியங்கள் ஒடுங்கு நிலையை அடைந்துவிட்டன. இதுபோன்றே இவன்காலத்திற்குப் பிற்பாடு உவமைகளும் ஒடுங்குநிலையை எய்தின. பாதாதிகேச வர்ணனைகளில் கவிஞர்கள் தங்கள் அறிவாற்றலைச் செலுத்தத் தொடங்கினர். முந்துநூல்களில் தாம் கற்றவற்றை நினைவிற் கொண்டு தம் செய்யுளில் அமைத்தலே கவித்துவம் என்றுங் கொண்டனர். புதியனபடைக்கும் ஆற்றலும் ஆழ்ந்த உள்ளுணர்ச்சியும் மனேபாவனையும் உண்மைக்கவித்துவமும் மறைந்துவிடலாயின. இயற்கையை நேர்பட அறிந்து அனுபவித்து அதனைக் கவிதைக்குப் பயன்படுமாறு உவமையாக மாற்றுந் திறமும் இல்லையாய்முடிந்தது. கவிதை வறட்சியுற்று இலக்கியமே ஒரு பாலைநிலமாகிவிட்டது. இதினின்று வெளியேறிக் கவிதையின்பம் சுரக்குநெறியில் முயன்ற கவிஞர்களுள் தேசியகவி பாரதியே தலைசிறந்தவர்.

உ

உலகியலும் இலக்கியமும்

[உயர்திரு. சி. கணேசையரவர்கள், வருத்தலைவிளான், யாழ்ப்பாணம்.]

ஒருவன் ஒருத்தியையே மணஞ்செய்துகொள்வது பொதுவான உலகியல்; இருமகளிரை மணஞ்செய்துகொள்வதும் உண்டு. ஒருவன் பலமகளிரை மணஞ்செய்துகொள்வது இக்காலத்தில் அரிதினுமரிது. ஒருத்தியை மணஞ்செய்துகொண்டுவாழ்பவனுக்கு, அவ்வாழ்விற் கலகமேற்படல் மிக அரிதாகும். இருமகளிரை மணஞ்செய்துகொண்டுவாழ்பவனுக்கு அவ்வாழ்விற் கலகமேற்படல் துணிபேயாகும். ஏனெனின்? இருமகளிருள்ளும் ஒருத்திக்கு முந்தி ஒருபொருளைக் கொடுத்தாலாவது ஒருத்தியை முந்தி அழைத்தாலாவது வேறு காரணங்களாலாவது எனினும் அவள்பாலன்புடையை என்று மற்றையாள் அவனுடன் பிணங்குவாளாகலான் இருமகளிரையும் ஒன்றுபடுத்தி வாழ்வது அவனுக்கு மிக அரிதாகும். அன்றியும் அவன்காதல் காரணமாக ஒருத்திமேலொருத்தி பொறாமைகொண்டு, அவனுடனும் தம்முள்ளும் கலகமிடுவதும் உண்டு. அவர்கள் கலகமிடும்போது அவர்களால் வளர்க்கப்பட்டனவும் அவர்களைச் சார்ந்தவர்களும் அவர்கள்பொருட்டாகத் தம்முட் கலகமிடுவதும் உண்டு. அதனாலும் அவர்களை ஒன்றுபடுத்திவாழ்தல் அரிதென்பது பெறப்படும். இவைபோல்வனவெல்லாம் உலகியலேயாம். இவைபோலும் உலகியல்களை இலக்கிய ஆசிரியர்கள் தம்மிலக்கியங்களுள் சுவைபட அமைத்துக்காட்டுதலுண்டு. முன்பின்கொடுத்தலால் இருமகளிர் தம் நாயகனோடு பிணங்குவதை,

"பொன்பெற்ற மார்ப னொருவன்சில போது கொய்து
கொன்பெற்ற வேற்கண் மடவார்கைக் கொடுத்த லோடும்
பின்பெற்ற நங்கை வெகுண்டாள் பழுதென்று பேசி
முன்பெற் றவளு மவைசிந்தி முனிந்து போனாள்"

என்று கந்தபுராணகாரர் கூறியதால் அறியலாம். முன்பின் கொடுத்தலாலன்றிச் சமமாகக்கொடுத்ததுபற்றியும் இருமகளிர் தம் நாயகனோடு பிணங்கினார்கள் எனக் கம்பர் கூறுவர். அதனை,

"சந்திக்க லாவெண் மதிவாணுத லாட னக்கும்
வந்திக்க லாகு மடவாட்கும் வகுத்து நல்கி
நிந்திக்க லாகா வுருவத்தின னின்ற போழ்தும்
சிந்திக்க லாப மயிற்கண்கள் சிவந்து போனார்."

என்னுஞ் செய்யுளான் அறியலாம்.

இனி நாயகன்காதல் காரணமாக ஒருத்திமேல் ஒருத்தி பொறாமைகொண்டு பிணங்கிக் கலகமிடுவதையும், அவர்கள் காரணமாக அவர்களால் வளர்க்கப்பட்டனவும் அவர்களைச் சார்ந்தாரும் தம்முட் பிணங்கிக் கலகமிடுவதையும் பின் காட்டப்படும் பரிபாடலென்னும் சங்கஇலக்கியத்திற் குன்றம்பூதனார் என்னும் புலவராற் சுவையுறப் பாடப்பெற்ற கூ-ம் பாடலில் வரும் அடிகளின்கருத்தான் உணரலாம். அவ்வடிகள் வருமாறு.—

"ஊழாரத் தோய்கரை நூக்கிப் புனறந்த
காழாரத் தம்புகை சுற்றிய தார்மார்பிற்
கேழாரம் பொற்ப வருவானைத் தோழா அ
வாழிய மாயாநின் றவறில்லை யெம்போலுங்
கேழிலார் மாணலமுண்கோ திருவுடையார்
மென்றோண்மே லல்கி நல்கலு மின்று
வையெயிற் றைய்யா மகளிர் திறமினிப்
பெய்ய வுழக்கு மழைக்காமற் றைய
கரையாவெர் நோக்கத்தாற் கைசுட்டிப் பெண்டி
ணிகலி னிகந்தாளை யவ்வே டலைக்கண்ணி
திருந்தடி தோயத் திறைகொடுப் பானை
வருந்த லெனவவற்கு மார்பளிப் பானைக்
குறுகலென் றொள்ளிழை கோதைகோ லாக
விறுகிறுக யாத்துப் புடைப்ப
வொருவர் மயிலொருவ ரொண்மயிலோ டேல
விருவர் வான்கிளி யேற்பின் மழலை
செறிகொண்டை மேல்வண்டு சென்றுபாய்ந் தன்றே
வெறிகொண்டான் குன்றத்து வண்டு;

தார்தார் பிணக்குவார் கண்ணியோச்சித் தடுமாறுவார்
மார்பணி கொங்கைவார் மத்திகையாப் புடைப்பார்
கோதை வரிப்பந்து கொண்டெறிவார்
பேதை மடநோக்கம் பிறிதாக வூத
நுடக்கு நொசிநுசுப்பார் நூழி நிலைக்கொள்ளக்
கயம்படு கமழ்சென்னிக் களிற்றியல்கைம் மாறுவார்
வயம்படு பரிப்புரவி மார்க்கம் வருவார்
தேரணி யணிகயிறு தெரிபு வருவார்
வரிசிலை வளைய மார்புற வாங்குவார்
வாளி வாளிக ணிலைபெற மறலுவார்
தோள்வளை யாழி சுழற்றுவார்
மென்சீர் மயிலிய லவர்.
வாண்மிகு வயமொய்ம்பின்
வரையகலத்தவனை வானவன் மகண்
மாணெழின் மலருண்கண்
மடமொழியவ ருடன்சுற்றிக்
கடிசுனையுட் குளித்தாடுநரு
மறையணிந்த வருஞ்சுனையா
னறவுண் வண்டாய் நரம்புளர்நருஞ்
சிகைமயிலாய்த் தோகைவிரித் தாடுநருங்
கோகுலமாய்க் கூவுநரு
மாகுல மாகுநருங்
குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளிதமர்
வித்தகத் தும்பை விளைத்தலான் வென்வேலாற்
கொத்தன்று தண்பரங் குன்று.''

இவ்வடிகளின் பொருள்;—''முருகவேள் வள்ளியம்மையாரைக் களவினான் மணந்து, அவ்வம்மையாருடனுறைந்து பின் தன்பால் வர, அம்முருகவேளால் முன்மணக்கப்பட்ட தெய்வயானையார், அவ்வேளுடன் பிணங்கி, வஞ்சனே! நீ வாழிய; நின்னையறியாது அகப்பட்டமகளிர்திறம், இனி மழைபெய்யவேண்டிவருந்தும் காவையொக்கும்; ஆதலால் அவரே தவறுடையராவதல்லது நீ தவறுடையையல்லை; நின்னையெய்துந் திருவுடையாரது மென்றோண்மேல் தங்கி நல்கலும் நினக்கின்று; ஆகையால் நின் மாணலம் யான் உண்ணக்கடவேனோ? என்று தன்னைத் தன்கையாற் சுட்டிக்காட்டிச்சொல்லி வெகுளிமிக்க நோக்கத்துடனே, அவன்,

பின் மணந்த வள்ளியம்மையாரென்னும் பெண்டுகாரணமாக உண்டான புலவியானே தன்னைநீங்கிய அத்தெய்வயானையாரைச் சென்றெய்தி, அம்முருகவேள் வணக்கமாகிய திறையைக் கொடுக்க வணங்க (அதனால்) அவ்வம்மையார் புலவிநீங்கி, அவ்வேளை வருந்தலென்று சொல்லித் தன்மார்பையளிப்ப, அதனைக்கண்டு வள்ளியம்மையார், இப்பொழுது அவளை நீ குறுகாதே என அவன்கையை மிக இறுகக்கட்டித் தன் மாலையைக்கோலாகக்கொண்டு புடைப்ப (அடிப்ப); அதனைக்கண்டு ஒருவர்மயில் ஒருவர்மயிலோடெதிர்க்க, இருவர் வான்கிளியும் தம்முள் மழலையேற்கின்ற வளவிலே (ஒன்றோடொன்று ஏச்சுப்படுகின்றவளவிலே) வெறியாட்டை விரும்பிய முருகவேளின் குன்றத்துவண்டு (வள்ளியம்மையாரது கொண்டைமேலுள்ள வண்டு) தெய்வயானையாரது கொண்டைமேலுள்ள வண்டை மேற்சென்று பாய்ந்தது(எதிர்த்தது). அங்ஙனம் பாய்ந்த அதனைக் கண்டு, தெய்வயானையாரது பாங்கியர் வள்ளிபாங்கியரோடு மாறுபட்டுத் தாரையும் தாரையும் பிணக்குவார்; கண்ணிகளை எறிந்து மாறுபடுவார்; கொங்கைமேலணிந்த கச்சை மத்திகையாகக்கொண்டு அடிப்பார்; கோதையையும் வரிப்பந்தையுங்கொண்டு ஒருவர்மேல் ஒருவர் எறிவாராய்த் தம் பேதைமையையுடைய மெல்லிய நோக்கம் வெகுளியான் வேறுபட, வாயால் ஊதநுடங்குகின்ற மூரியும் இடையினராயிருந்தே (மெல்லியராயிருந்தே) நெருங்கியோரை மேற்கொள்ள; அதனைக்கண்டு, வள்ளிபாங்கியராகிய மெல்லிய மயில்போலும் சாயலார், தோட்டிப்புண்ணால் மென்மைப்பட்ட சென்னியையுடைத்தாய மதங்கமழும் களிற்றின் போரியல்பைத் தம்பாற்கொள்வார், குதிரைக்கதியால் வருவார், தேர்களினணிபோல் வடிகயிற்றைத் தெரிந்துகொண்டுவருவார்; கண்களாகிய அம்புகள் அவர்கள் மார்பிற்பொருந்தப் புருவங்களாகிய வில்லை வளைப்பார்; வாள்வீரர்நிலைமைப்படப் பகைப்பார் (வெகுண்டுபார்ப்பார்), தமது தோள்வளைகளைக் கழற்றிச் சக்கரப்படைகளாகக் கையிற்கொண்டு சுழற்றியெறிவாராக; தெய்வானையின் பாங்கியர், அதற்குஅஞ்சி முருகவேளைத் தொக்குச் சூழ்ந்துகொண்டு மணம்பொருந்திய அம்மலைச்சுனைக்கண் குளித்து விளையாடுவாரும், அச்சுனைக்கண் வண்டாய்நின்று யாழிசையைப் பாடுவாரும்; சூட்டையுடைய மயில்போலநின்று தோகைபோலுங் கூந்தலை விரித்து

ஆடுவாரும், குயிலாகிநின்று கூவுவாரும், ஆரவாரமுடையருமாகக் குறிஞ்சிநிலத்துமக்களாகிய குறவர்பெற்ற மறவியல்புவிளங்கும் கொடிச்சியர் திருந்திய தும்பைப்போரைச் செய்தலால் வெல்லும் வேற்படையையுடைய முருகவேளின் வெறியாட்டுக்குத் தண்ணிய திருப்பரங்குன்று இயைந்ததே'' என்பதாகும்.

இச்செய்யுட்கருத்தானே, இச்செய்யுளைப்பாடிய புலவர் முருக வேளின் தேவிமாரிருவரும் அம்முருகவேளின் காதல்காரணமாகக் கலகமிடுவதையும், தம்முட்பிணங்கிய இருவீட்டார் கலகமிடும் போது அவர்களால் வளர்க்கப்பட்ட நாய்களும் தம்முட்குரைத்துக் கலகமிடுவதுபோல அத்தேவிமாரால் வளர்க்கப்பட்ட மயின்முதலி யன தம்முட் கலகமிடுவதையும், அவர்கள் பாங்கியரும் தம்முட் கலகமிடுவதையும் படிப்போரின்புறுமாறு போர்செய்வாரினியல்புற அமைத்து, மிக அழகாகச் சுவைபடக் கூறியிருத்தல் காண்க. அன்றியும், இச்செய்யுளைப்பாடிய புலவர் தெய்வானையாருடைய பாங்கியர் பொரும்வலியிலர் என்பது தோன்ற "ஊதநுடங்கும் நொசிநுசுப்பார்'' என்றும், "நூழிறலைக்கொள்ள'' என்றும், வள்ளி யம்மையாருடைய பாங்கியர் பொரும்வலியுடையர் என்பது தோன்றக் "குறிஞ்சிக்குன்றவர் மறங்கெழுவள்ளிதமர்'' என்றும், "வித்தகத்தும்பை'' என்றும் நுண்பொருள்தரத் தெரித்துக்கூறிய தும் மிகவும் சுவைதந்து அவர்தம் நுண்மதியை யுணர்த்திநிற்ற லும் காண்க.

இன்னும் ஒருதலைமகனுடைய மனைவியர்பாற் பணியாளரா யிருப்பாரும் அத்தலைமகனால் அன்புசெய்யப்பட்டாரொருவர் தமக்கு ஒரு சிறுதீங்குசெய்யினும் அதனைத் தம்மனத்தில் வைத் திருந்து தாம் அவர்க்குப் பதில்செய்தற்கேற்ற காலம்நோக்கித் தம் மாற்செய்தல்முடியாதாயினும் செய்தற்கேற்றாரையடைந்து அவர் தமக்குத் தீமைசெய்தார்மேல் நன்மனமுடையாராயினும் அம்மனத் தைத் தம்சூழ்ச்சிவலியினாலே புத்திகூறித் திரியச்செய்து அவரால் அத்தீமைசெய்தாரைக் கெடுப்பித்தல் உலகியல்பாகும். இவ் வியல்பை முன்னொருநாள் இராமபிரான் தன்சிறுவயதிலே விளை யாட்டாக உண்டையால் எய்து தன்னை அவமானப்படுத்தியதை,

மந்தரை என்பாள் தன்மனத்தில் வைத்திருந்து பின் இராமபிரானுக்கு முடிசூட்டுமாறு தயரதன் நியமித்தகாலத்திலே அவள் இக்காலமே இராமனை அவமானப்படுத்தற்கேற்றசமயமெனச் சிந்தித்து அவன் முடிசூட்டைக் கெடுத்தற்கேற்றவள் கைகேயியே என ஆலோசித்து அவளையடைந்து அவள் இராமபிரான்பால் நன்மனமுடையளாயிருந்தும் அவள் மனத்தைத் தன்சூழ்ச்சியின்வலியினாலே புத்திகூறித் திரியச்செய்து, அவளால் அவனை முடிசூடாமற் கெடுப்பித்தாள் என்று கம்பராலியற்றப்பட்ட இராமாவதாரம் எனப் பெயரிய பெருங்காப்பியத்துள், மந்தரைப்படலத்துக் கூறப்பட்ட சரிதத்தான் அறியலாம். மந்தரையின் சூழ்ச்சிவலியை அவ்விராமாவதாரத்து மந்தரைசூழ்ச்சிப்படலத்துள்வரும், "அஞ்சி மந்தரை யகன்றிலள்" என்பதை முதலாகவுடைய செய்யுள் தொடங்கிக் "கெடுத்தொழிந்தனை யுனக்கரும் புதல்வனை" என்பதை முதலாகவுடைய செய்யுளிறுதியாகவுள்ள செய்யுட்களான் உணர்க. கைகேயி இராமபிரான்பால் நன்மனமுடையளாயிருந்தாளென்பதைப்,

"பராவரும் புதல்வரைப் பயக்க யாவரு
முராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
விராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள்"

என்னுஞ் செய்யுளானும், "ஆழ்ந்தபேரன்பினா ளனையகூறலும்" என்னுஞ் செய்யுளடியானும், அவள் மனந்திரிந்தமையை,—

"தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையும் திரிந்தது"

என்னும் செய்யுளடிகளானும்,

"அனைய தன்மைய ளாகிய கைகய னன்னம்
வினை நிரம்பிய கூனியை விரும்பின ணோக்கி
யெனையு வந்தனை யினியையென் மகனுக்கு மனையான்
புனையு நீண்முடி பெறும்படி புகலுதி யென்றாள்."

என்னுஞ் செய்யுளானும் அறிக.

ஸ்ரீ:

திருக்குருகூர்த் திருப்பணிமாலை

[முன்னுரை:—குருகூர் என்பது, திருமால்திருப்பதி நூற்றெட்டுள் பாண்டிநாட்டுப் பொருநையாற்றின் தென்கரையிலுள்ளதொருதலம். இங்குச் சங்கராசன் வழிபட்டுப் பேறுபெற்றமையால் முன் இத்தலம் குருகூர், குருகை என வழங்கலாயிற்று. குருகு-சங்கு. பின் வேதம் தமிழ்செய்த மாறன் நித்யவாசஞ்செய்யுஞ்சிறப்பால் ஆழ்வார்திருநகரி என்னும் பெயர்வழக்கும் உடையதாயிற்று. இத்தலம், ஞானப்பிரானுகிய வராகப்பெருமானுலயமும், ஆதிநாதராகிய பொலிந்துநின்றபிரான்ஸந்நிதியும், துறவாதவர்க்கும் துறந்தவர்க்கும் சொல்லவே சுரக்கும் அறவாவவையிங்கொராயிரம்தந்த பிரபந்நஜனகூடஸ்தராகிய சடகோபர்ஸந்நிதியும், வான் திகழும் சோலை மதிலரங்கர்வண்புகழ்மேல் ஆன்றதமிழ்மறைகளாயிரமும் வளர்த்த இதத்தாயாகிய எம்பெருமானுர்ஸந்நிதியும், பிற ஆலயங்களும் தன்கட்கொண்டு விளங்குவது. இத்தலத்து நிகழ்ந்த திருப்பணிகள் பல. அவற்றை விரித்துரைக்கும் இத்திருப்பணிமாலையை இயற்றியவர் பெயர் முதலிய விவரமொன்றுங் கிடைக்கவில்லை. சரித்திர ஆராய்ச்சிசெய்வார்க்குப் பயன்படத்தக்க இம்மாலை, ஆழ்வார்திருநகரி ஆழ்வார் ஆதிநாதர்கோயில் ஸ்தாநீகரும் தமிழ்ச்சுவையறிந்த விழுத்தகுசெல்வரும் ஆன உயர்திரு பெரியன் வே. நா. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் உதவிய காகிதக்கையெழுத்துப்பிரதியிலுள்ளபடி வெளியிடப்படுகிறது. இந்த மாலையிலுள்ளசெய்யுட்களிற்கூறும் திருப்பணி முதலியவை ஆழ்வார்திருகரி உயர்திரு. ஆதிநாதபிள்ளையவர்கள் எழுதிய குறிப்புரையுள் விளக்கப்பட்டுள்ளன. விளங்காதன பலவுள. அவற்றையெல்லாம் ஆராய்ச்சியாளர் விளக்கியுதவுவார்களாக.

பத்திராசிரியர்.]

காப்பு

வெண்பா.

௧ வீரன் திருக்குருகூர் மெய்ஞ்ஞான முத்திரைக்கை
மாறன் திருப்பணிப்பா மாலைக்கு—நாறுதுழாய்
மைக்கொண்ட லாதிதிரு மண்ணிலையும் விண்ணிலையும்
கைக் கொண்ட பூதூரன் காப்பு.

நூல்

கற்பணி.

1 பிரமனூர் முதற்கண்ட வேன ஞானப்
பிரான்கோயில் வடக்கினவன் பின்னே கண்ட
பரமனூர் பொலிந்துநின்ற முகில்வி மானப்
பருப்பதத்தைக் கலிபிறந்து நாலைஞ் ஞூற்று
விரவுமெழு நூற்றொருபான் விழுநூற் றேழில்
மேவியவைப் பசியுரோ கிணிநாட் கண்டான்
றிரள்புயா சலத்துலகம் புரக்குங் கூடற்
சீவலவன் செப்பேடு கண்ட வேந்தே.

குறிப்புரை

௧ வீறன்-நாவீறன்=சடகோபன். துழாய் மைக் கொண்டல் - துழாய் மாலையணிந்த கரியமேகமாகிய திருமால். ஆதி - உலககாரணன்; தலைமை யுடையவன் எனினும் ஆம். மண்நிலை - லீலாவிபூதி. விண்நிலை - நித்யவிபூதி. பூதூரன் - இராமாநுஜன்.

1 பிரமன் குருகூரில் முன்னே வராகநயினராகிய ஞானப்பிரான் கோயிலையுண்டாக்கிப் பூசித்தான்; பின்னர் ஞானப்பிரான்கோயிலின் வடக்காகப் பொலிந்துநின்றபிரான்கோயிலையுண்டாக்கிப் பூசித்தான். பொலிந்துநின்றபிரான்கோயில்விமானத்தை மதுரைச் செப்பேடுகண்ட ஸ்ரீ வல்லபபாண்டியன் கலிபிறந்து 2817 ஆம் ஆண்டு ஐப்பசிமீ உரோகிணி நாளில் கட்டினன். இதிற்குறித்த யாண்டு 3707 என்றும் கொள்ளக்கிடக் கிறது.

2 வேரி நாண்மலர்த் தாமரைப் பொய்கைசூழ் மெய்த் தமிழ்க் குருகூரிற், காரி மாறர்பொற் கோயிலும் சிகரமும் கண்டுபே ரிசைகொண்டான், வாரி சூழ்புவிக் கெல்லவன் பூமகள் வல்லவன் புலவோர்க்குப், பாரி போன்றருள் *நரிக்குடிப் பல்லவன் பல்லவர் பெருமானே.

3 தோடு கொண்டதார்த் துரகதத் திரைக்கடற் றுலுக்கு கொண் டிடுநாளிற், காடு கொண்டதென் குருகைமா நகரினைக் கழனிநா டதுகண்டான், ஈடு கொண்டவா யிரந்தமி ழொடுமெழுத் தெட்டுவங் தருள்கூறும், பீடு கொண்டதே சிகன்றிரு வாய்மொழிப் பிள்ளையெம் பெருமானே.

4 அலராசன் பின்னுதித்த கண்ணனும் பொலிந்துநின்ற அமலன் சொற்பால், வலராசன் றிருப்பணியி னெடுதிருவா ராத னைக்கு மதித்த னேகம், சலராசி சூழ்க்ராமம் சருவமா னியம்விடுத் தான் றரிய லாரெண், குலராசர் விசயநகர் கொண்டாரச னென்ற சிலைக்கொற்ற வேந்தே?

5 மானியநா ளையினெடுமால் கோயில்மகா மண்டபமு மாற னுமெங், கோனியதி கொண்டருளும் மஞ்சனமா மண்டபமுங் கோதி லாச்சோ, பானமணி மண்டபமுந் திருநடமா ளிகைப்பத்தி

---

* நற்குடி [பி - ம்.]

3 துலுக்கராட்சியில் காடாகிய குருகூரைத் திருவாய்மொழிப்பிள்ளை காட்டையழித்துக் கழனிநாடாக்கினர். இவர் மணவாளமாமுனிவரினுசிரியர்; சடகோபதாதர் என்னும் ஆழ்வாரருளிப்பாடுடையார். ஈடுகொண்ட ஆயிரம் தமிழ் - ஈடு என்னும் பெயரையுடைய விரிவுரையோடுகூடியதும் சடகோபர் அருளியதுமான திருவாய்மொழி.

4 விஜயநகரமன்னருள் ஒருவர், பொலிந்துநின்றபிரான்கோயிலிலும் ஆழ்வார்கோயிலிலும் திருப்பணிசெய்து திருவாராதனைக்கு ஊர்களும் விளை நிலங்களும் வழங்கினர். அலராசன் - பலராமன். சொற்பால் வலராசன் - நாவீறன், கல்விப்பிரான், திருநாவீறுடையபிரான், திருவாய்மொழிகூறும் பகுதியில் வெற்றியுள்ள மன்னவன் = சடகோபர்.

5 பழந்தமிழ்வல்ல திருவாய்மொழியழதார் ஸ்தானீகராயராய் விளங்கினர். அவர் விஜயநகரராசர் மானியம்விட்ட அந்நாளில் ஆதிநாதர்

பலவுங் கண்டான், முனிகரா யன்றிருவாய் மொழியமுதா ரென்னு முது தமிழ்வல் லோனே.

6 கேழல்ஞா னப்பிரான் சந்நிதியிற் கருடனறைக் கிட்டின னேங்கும், சூழலார் பொருளுநிறை யறைதிகழ்மா மண்டபமுந் தூய தாய, கூழரு மடைப்பள்ளி மண்டபமுங் கண்டுபுகழ் கொண் டான் றண்டார், நீழலார் தனிக்கவிகை வழுதிசீ வலவன்வழி நிருபர் கோவே.

7 அம்புயா சனமாற னாதிமால் கொடித்தூணு மம்பொன் பூசி, எம்பிராற் கொருசீப ராங்குசமண் டபமுமா னியநாட் கண் டான், றம்பநா லாயிரப்பா டலுங்கைவரு குழைக்காதன் றம்பி கும்ப, கம்பயா னைக்குதவு முகிலிரா மாநுசனுங் கன்னல் வேளே.

8 கிடையுறுநெற் களஞ்சியமும் நெற்குத்துப் புரையுந்தென் கிழக்காயுள்ள, கடையுறுகே டகக்குழிமண் டபமுமிர சதத்தா லும் கனகத் தாலும், நடையுறுவா கனம்பலவு மானியநாட் செய்து புகழ் நாட்டி னன்செந், தொடையுறுநா லாயிரமும் வல்லசட கோபனெனும் தங்க வேளே.

கோயில் மகாமண்டபத்தையும் நம்மாழ்வார் திருமஞ்சனமண்டபத்தையும் சோபான மணிமண்டபத்தையும் நடமாளிகைப்பத்திகளையும் கட்டினர்.

6 ஸ்ரீவல்லபபாண்டியன்வழியில் வந்த மன்னன் ஒருவன் ஞானப் பிரான்கோயில்முன் கருடனுள்ள அறை, ஸ்ரீகிருஷ்ணன்கோயில் மகாமண்ட பம், கருவூலம், மடைப்பள்ளிமண்டபம் ஆகியவற்றைக் கட்டிப் புகழ்பெற் றான். கேழல் - வராகம். கேழலாகிய ஞானப்பிரான் என்க.

7 குழைக்காதன்றம்பியாகிய இராமாநுஜவேள் என்பார் ஆழ்வார் ஆதிநாதர்கோயிற் கொடிக்கம்பங்களுக்குப் பொன்பூசினர். ஆதிநாதருக்கு ஸ்ரீபராங்குசமண்டபமுங்கட்டினர்.

8 நாலாயிரமும்வல்ல சடகோபவேள் மானியநாளில் நெற்களஞ்சியம், குற்றுப்புரை, தென்கிழக்கிலுள்ள கேடகக்குழிமண்டபம் மூன்றையுங் கட்டினர். பல வாகனங்களை இரசதத்தாலும் பொன்னாலும் பொதிந்து வைத்தார். இரசதம் - வெள்ளி.

9 மருவுநடுக்கோபுரமு முதற்பிராகாரத்துநெடு மதிளும் நீடு, மிருகொடிக்கம் பமுஞ்சிங்கப் பெருமாள்மண் டபமுமாலெங்கோன் கம்பத், தருகுவளை காவணக்கால் மண்டபமு மானியமா மந்நாட் கண்டான், பெருகுதமிழ்க் குழைக்காதன் றம்பிசட கோபனெனும் பெருமை யோனே.

10 கள்ளவிழ்பூந் தண்டுளபத் திருநெடுமா லுடனெங்கோன் காரி மாற, ருள்ளமுவந் தலவுதிரு வாய்மொழிமண் டபந்திருநாட் கொருநாட் கண்டான், பிள்ளைநிலாத் திகழ்சடையோன் கோளூரிவ் வூரெல்லைப் பிசகு தீர்த்த, வள்ளல்சுசீந் திரமுடையான் சடகோபதாத னிகல்மாற வேளே.

11 சதுமறையின் பொருடெரிந்து ஞானமய மானகவித் தமிழே செய்யும், மதுரகவி நம்மாழ்வார் கோயிலிற்சக் கரத்தாழ் வார் மகிழ்வா யோங்கப், புதியதிருக் கோயில்மணி மண்டபமுஞ் செய்துமிகு புகழே பெற்றான், துதிமருவு மனந்தநா ராயணையங்கா ரென்னும் தங்க வேளே.

---

9 குழைக்காதன்றம்பி சடகோபவேள் நடுக்கோபுரத்தையும், முதற் பிராகாரநெடுமதிலையும், ஆழ்வார் ஆதிநாதர் கொடிக்கம்பத்தையும், சிங் கப்பெருமாள்மண்டபத்தையும் ஆதிநாதர்கொடிக்கம்பஞ்சூழ்ந்த காவணக் கால்மண்டபத்தையும் கட்டினார்.

நடுக்கோபுர மேல்மாடமூன்றனுள் இரண்டில் யாளி தூண் உத்தரம் யாவும் சிறப்புமிக்க மரவேலைப்பாடு நிரம்பியது. அவை சிதைந்து அழியும் நிலையிலுள்ளன.

10 நம்மாழ்வாரும் ஆதிநாதரும் எழுந்தருளுகிற திருவாய்மொழி மண்டபத்தைச் சடகோபதாதர் கட்டினார். இவர் திருக்கோளூருக்கும் குருகூருக்கும் உள்ள எல்லைவழக்கைத் தீர்த்துவிட்டார். இச்சடகோபதாதர் திருவாய்மொழிப்பிள்ளைசடகோபதாசரின் வேறானவரே.

11 நம்மாழ்வார்கோயிலிற் சக்கரத்தாழ்வார்கோயிலும் மணிமண்டப மும் கட்டினவர் அனந்தநாராயணையங்கார். மதுரகவியாகிய நம்மாழ்வார் என்க.

12 கண்ணனருள் பொலிந்துநின்ற வாதிமால் சந்நிதிமுன் கவின்பெற்றோங்கும், வண்ணநெடுஞ் சோபான ஆத்தான மண்டப மா மலைபோற் கண்டான், எண்ணரிய சதுமறையுட் பொருளாயுந் தென்னரங்க ரிணைத்தாள் போற்றும், அண்ணலழ கியமணவா ளத்தபோ தனன்மூக்கோ லதிபர் கோவே.

13 தானமழைப் புயனெடுங்கைத் தந்திகொடு வருகெனக் கோத் தருபொன் யாவும், மானபராங் குசத்தந்திக் குளப்பெரிய திருமதிளா மடுக்கல் கண்டான், மீனவர்கோன் வாயிற்கா ரியப் பிரபு மேருவெனும் விரிந்த கீர்த்தி, மானபர னப்பாண்டான்மழவ ரா யன்குவளை மாலை யோனே.

14 செகமேழும் புகழ்குருங்கைப் பொலிந்துநின்றார் மகிழ் மாறர் சிந்தை கூர, மகமேருக் கிணையாகக் கோபுரமுஞ் செய்துமிக மகிழ்ச்சி பெற்றான், அகமகிழ்ந் தருள்புரியு மரங்கேசர் தாளிணை யை யன்பாய்ப் போற்றும், பகர்வேத மறையவர்சூழ் மணவாளசீ யர்பா கவதர் கோவே.

15 திருமணிமண் டபமுமதன் வடக்கினடு மண்டபமுந் திருவை காசிக், கொருபெரிய தேரேற்று மண்டபமுஞ் சிறப்புவிழா வுள்ள யாவும், பெருகுபடித் தாமுதலா மெவையுநர சிங்கையனாற்

---

12 அழகியமணவாளஜீயர் (மணவாளமாமுனிகள்) ஆதிநாதர் கோயின்முன்புள்ள சோபானஆஸ்தானமண்டபத்தை மலைபோற்கட்டிவைத் தார். [கருடனுக்குமுன் ஒரு தூணில் மணவாளமாமுனிகளின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது.]

13 பாண்டியன்வாயிற்காரியம்பார்த்த மழவராயன் அப்பாண்டான், அரசன் யானை வாங்கக்கொடுத்த பொன்னால் (நம்மாழ்வார்கோயில்) பெரிய திருமதிலைக் கட்டினான்.

14 அழகியமணவாளசீயர் வெளிமதிட்கோபுரம் கட்டினார். இவர் 12-ஆம் பாட்டிற்குறித்த மணவாள மாமுனிகளே! குருங்கை - குருகூர்.

15 விசுவநாதநாயக்கர்மகன் குமாரகிருஷ்ணப்பநாயக்கர் நரசிங்கன் மூலமாகத் திருமணிமண்டபத்தையும், அதற்கு வடக்கேயுள்ள நடுமண்டபத்

பெரிது சேர்த்தான், கருதலரெண் விச்சுவநா தையன்கிட்ணபூபதி தென் கச்சி வேந்தே.

16 அரிகிட்டிணன் கோயிலுமக் கோயில்மகா மண்டபமு மம்பொன் மேரு, கிரியொத்த வொருமடமு மதன்றெற்காம் வெளிக்குறடுங் கிளரக் கண்டான், பரிகச்சி யாதிபன்மா பகடுதிறை கொண்டுசரண் பரவார் வந்து, தெரிசிக்குங் கடைத்தலையான் பெரியவீ ரப்பனருட் செங்கண் மாலே.

17 தாதிவர் துளவினர் தசாவ தாரமும்
தீதிலாப் படிபிர திட்டை தான்செய்தான்
பூதியம் யாவையும் புகழும் தொண்டைநா
டாதிப னுத்தண்டி யப்ப பூபனே.

18 பெருங்கவின் மடமும்விப் பிரரெ லாமுணற்
கிரும்பொனு யிரங்கோயி லின்முன் னல்கினள்
அருந்தரு சிக்கிலாழ்வாரப் பன்குலத்
தருந்த திக்கரும் பாச்சி யன்னமே.

தையும், வைகாசித் தேரேற்றுமண்டபத்தையும் கட்டி விழாக்களையும் படித் தரங்களையும் மிகவுஞ்சேர்த்தார்.

விசுவநாதர் 1559 முதல் 1563 வரை. கிருஷ்ணப்பர் 1573 வரை.

16 கிருஷ்ணப்பநாயக்கர் (1573 — 1595) பெரியவீரப்பநாயக்க ருடையமகன் பெரியவீரப்பநாயக்கரே குமாரகிருஷ்ணப்பநாயக்கர் 1563 முதல் 1573வரை யாண்டவர். இவர் தற்காலம் ஆனைச்சாலைக் கிருஷ்ணன் கோவில் என்னும் அரிகிருஷ்ணன்கோவிலையும் அக்கோயில் மகாமண்டபத் தையும் மடத்தையும் (பாடசாலையுள்ளஇடம்) அதன் தெற்கேயுள்ள இராமா யணபட்டாபிஷேக வெளிக்குறட்டையும் கட்டினர்.

18 கரும்பாச்சியம்மாள் சிக்கில் ஆழ்வாரப்பன் குலத்தவள். ஆயிரம் பொன்கொடுத்து அந்தணர் உண்ணுதற்கு ஏற்பாடுசெய்தாள். அதற்காக ஒருமடமும் கட்டிமுடித்தாள். அது உடையவர்கோயில் தென்மேற்குமூலையி லுள்ளது; தற்காலம் பாகவதர்கள் இராமாஜகூடமாக விளங்குகிறது; இவ்வூர் ஆதிநாதராழ்வார் சந்நிதிஸ்தானீகர்களில் முதற்கூட்டத்தாரான பெரியன் வகையார் அனுபோகத்திலிருந்தது.

19 விதியி னுன்மறை மெய்த்தமிழ் பாடிய
பதின்மர் சூழ்தரு பங்க யாசனம்
நிதியி னுன்முன் னெடிதமைத் தான்வர
நதிகு லாதிபன் நல்ல பிறப்பனே.

20 தேவு மாடத் திருக்குரு கூரப்பன்
கோயி லுன்முதற் கூறிய வான்மதில்
தூவி மானமுந் தோன்ற வியற்றினுன்
காவி மாலிகைக் காலிங்க ராயனே.

21 குவளைவயல் சூழ்குருகைக் கோமான் தெப்பக்
குளம்புதிதிற் றிகழ்செங்கன் மதிளுந் தாரத்
தவளமடற் கரண்டகமன் னம்பொன் னூஞ்
சமரபூ பாலனம்பொற் ப்ரபையு மாக்கித்
திவளுமணி மண்டபமும் கோயில் யாவும்
சிதைவிலா வெண்சுதைதட் டோடும் வேய்ந்தான்
கவளமதா சலஞ்சொல்வட மலைபூ பாலன்
காவைசூழ் காவையூர்க் காவலோனே.

22 வாசலுக்கு வடபால் மகிழ்மாறர் மகிழ்ந்தருள மகிமை யாகத், தேசமெல்லாம் புகழ்ந்திடவே சீராமப் பிரதிட்டை சிறப் பாய் நல்ல, பூசுரர்கள் வந்துதொழ மகாமண்ட பங்கோயில் புகழச் செய்தான், பேசுமொழி மாறுத பெரியவீ ரப்பனெனும் பெருமை யோனே.

23 மேய கோடை விழாவரு மண்டபம்
தூய தாந்திருச் சுற்றி னியற்றினுன்
தேயம் யாவும் திகழ்புக ழேட்டியூர்
நாய பூபதி நல்வணி கேசனே.

---

22 பெரியவீரப்பநாயக்கர் (1563-73) வாசலுக்கு வடபுறம் ஸ்ரீராமன் கோயில் மகாமண்டபமும்கட்டி இராமனையும் பிரதிட்டைசெய்தார்.

23 எட்டியூர்வணிகன் நியாயபூபதி வசந்தமண்டபத்தை இரண்டாம் சுற்றுவழியில் (மேல்புறம்) கட்டினுன்.

24 அடவி சூழ்கூரத் தாழ்வாருக் காதர
வுடனனைத் தழகு கோயில்கண் டோங்கினன்
குடமுனி தமிழ்க்கெனும் கூரகு லோத்தமத்
திடமுனி முனிவரர் செய்ய தீபமே.

25 இருவகையா மேல்வாச லிரண்டுமண் டபத்துடனே யேய்ந்த ஞானக், குருபரன்மஞ் சனக்குறடு நூற்றுக்கால் மண்டமும் குல்லை மாலைத், திருநெடுமால் வீற்றிருக்கு மிருகருங்கற் குறடு மிவை சிறப்பாய்ச் செய்தான், கருணைநெடுங் கடலாழ்வார் திருவ ரங்க மாமுனிபா கவதர் கோவே.

26 மஞ்சனங்கொண் டருளிவீற் றிருக்கு நாற்றூண்
மருவலங்கா ராசனமண் டபமு நீடும்
அஞ்சனமே னிப்பெருமாள் அழகர் கோயி
லாயவிடா யாற்றிமண் டபமு மேற்கண்
டெஞ்சலிலாக் கட்டளைப்பொங் கலும்வி ழாவுக்
கியற்றியமண் டபப்படியு மிதுநாள் விட்டான்
செஞ்சிலைவேள் கச்சியேதி ராசன் பாலன்
சேகநாத முகிலிகலுந் தேவ ரேறே.

27 மல்குதிரு வாய்மொழிமண் டபத்துக் காரி
மாறர்வீற் றிருக்குமொரு குறடும் ஞானம்
நல்குதமிழ்த் திருமண்ட பத்து ளாதி
நாதர் வீற்றிருக்குமொரு குறடுங் கண்டான்
கொல்களிறு காத்தமுகிற் கணியல் சூடிக்
கொடுத்தருள்கொம்பின்குளத் துமுளத் துமேவச்
சொல்கடனிற் கண்டவேள் வென்றி மாலைத்
துணைவன்வைத்த மாநிதிபூ சுரர்பி ரானே.

---

24 கூரகுலோத்தமர் கூரத்தாழ்வார்கோயிலைக் கட்டினர். அந் நாளில் மேற்கே காடு சூழ்ந்திருந்ததுபோலும்.

28 தேனவாந் தண்டுளபத் திருநெடுமால் சரணமல்லாற் சிந்தி யாத, மோனஞா னக்காரர் திருப்புளிசூழ் மண்டபத்தை முறையே கண்டான், வானமா மலைமுனிதாள் பட்டர்பிரா னுடன்விழைந்த மதவேள் பஞ்ச, மானநா ளினும்வைத்த படிகுறையாக் கோனேரி யப்ப வேந்தே.

29 இவர்ந்த பூதூ ரெதிராசன் கோயிலை
யுவந்தனைத் தழகுங்கண் டுலகி னேங்கினன்
சிவந்தபங் கயமுகன் சீனி வாஸமா
தவன்றிரி கோற்கோன்மா தவர்கி ரீடமே.

30 சீர்தரு மார்கழிச் சிறப்பிற் றன்னுடைப்
பேர்தரு சிறப்பையும் பெரிதுசேர்த் தருள்
கூர்தரு தெப்பநீர்க் குளமும் வெட்டினன்
வார்தனுத் திருவடி வஞ்சி வேந்தனே.

31 மேலைக்கோ புரமடியிட் டாதிமால் கோடைவிழாச் சிறப் பாய்ச் செய்து, தாலத்தார் தொழுமொருசீ ராமனையும் ப்ரதிட்டை செய்து தனிச்சீர் பெற்றான், பாலைப்போன் மொழியார்வேள் பெரியதிரு மலைநம்பி பரித்த போரான், வாலச்சீ வகனனைய மாதவபூ பதிவீர மார வேளே.

32 குலங்கோணுன் மறையவருண் கொள்ள மாமட
மிலங்கவே தென்கிழக்கா லியற்றினன் மனங்
கலங்குறு வீரரா கவனெஞ் ஞாலமுந்
துலங்குபொற் றனுவுடைத் தொண்டை நாடனே.

33 இலவிதழ்ச்செவ் வாயுடைய நங்கைபெற்ற திருப்புளிக்கீ ழிருந்த கோவும், நிலவுமிழ்வெண் சங்காழி கொளுமசல மெனப் பொலிந்து நின்ற மாலும், குலவுமுதற் கோபுரத்து முற்குறடும் கொடிக்கம்பக் குறடுங் கண்டான், பலவுலகம் படர்புகழ்கோங் கணவாள பட்டனெனும் பச்சை மாலே.

---

33 கொங்கணவாளபட்டர் கொடிக்கம்பக்குறடும் முதற்கோபுரத்து முன்குறடும் கட்டினர். இதனைத் தற்காலம் கோங்கணியன்குறடு என்கிறார் கள். உடையநங்கையென்பது சடகோபரைப்பெற்ற தாயார் திருநாமம், திருப்புளிக்கீழ் இருந்த கோ - சடகோபர். அசலம் - மலை,

34 பெருகியசங் கணிதுறைக்குத் தெற்குமே விரசிங்கப் பெருமாள் கோயில், அருகுலவு மண்டபமும் கன்மதிலும் வாங்குபடி யாவும் செய்தே, மருவுநடைக் காவணமும் ஆவணமும் அமைத்தனுல் வரம்பில் கீர்த்தி, இருநிலம்யா வையுமருவு முகந்தடிமை கொண்டவன்போ ருக்குவேளே.

35 கெருடன் வாழ்வட கீழ்த்திசைப் பூமகள்
மருவு கோயில் மகிழ்ந்துகண் டான்தமிழ்
முருகுலாவு முதலிக ணுயகன்
மருகன் வீரப்பன் மாதர்சல் லாபனே.

36 காருலாங் திருமதிட் கருடன் கோபுரம்
ஊருலாங் திருப்புளி யூர்தி யாக்கினுன்
தாருலாஞ் சேவ்வந்தி தமையன் ... ...
ஏருலாம் புகழ்க்கும் எல்லார்க்கு நாதனே.

37 வந்துலாம் வெளிப்பெரிய காவணக்கால் மண்டபமும் வயின தேயன், முந்துலா வியல்வசந்த மண்டபமும் கண்டுசீர் முழுதும் பெற்றுன், சிந்துபூர் துறைச்சிவனம் மன்பேட்டைத் திருமால்ப்ர திட்டை யாவும், நிந்தியா திபற்றுமிரு நிதிப்பிள்ளைப் பெருமாளா நீதி மானே.

---

34 இச்செய்யுளிற்கூறிய திருப்பணிகள், சங்கணி துறையின் தெற்கே தீர்த்தவாரி நரசிங்கப்பெருமாள்கோயிலருகேயுள்ள மண்டபம், மதில், படிகள், பந்தல், ஆவணம் என்பன. இவற்றை இயற்றியவர்பெயர் விளங்கவில்லை.

35 முதலிகள்தலைவரின் மருகராகிய வீரப்பன் என்பார் கருடன் கோயிலின் வடகிழக்கே ஆண்டாள்கோயிலைக் கட்டினுர். இங்கே முதலிகள் நாயகன் என்பார் அரியநாயகர்போலும்.

36 கருடன்கோபுரமும் திருப்புளியமரவாகனமும் செய்தவர் செவ்வந்தியின்முன்னேன்.

37 சிந்துபூர்துறையில் சிவனையும் அம்மன்பேட்டையில் திருமாலையும் பிரதிட்டைசெய்தவராகிய பிள்ளைப்பெருமாள் பெரியகாவணக்கால் மண்டபத்தையும், வயினதேயன்முன் வசந்தமண்டபத்தையும் கட்டினுர்.

38 தென்குருகை மாலாதி மகிழ்மாற ரிருவருக்கும் திருவுள மகிழ்ச்சி யாக, முன்பெரிய காவணக்கா லழகுமண்டபமடுத்த முகப்பு மண்டபமும், அன்புடனே பரமபத வாசலுக்குத் தெற்கா மடுத்தமண் டபமுமழ காகக் கண்டான், ஒன்பது சீர்த் திருப்பதிரா மாநுசசீ யர்முக்கோ லுயர்வில் வேளே.

39 அலங்கு கொங்கணி யன்குற டானதை
வலங்கொள் மண்டப மாமலை போற்செய்தான்
விலங்க நீட்டிசை வீரப்ப பூபதி
குலஞ்செய் ததவங் குமார சாமியே.

40 எத்தான திருமொழிமண் டபத்து மாறன்
எம்பிரான் வீற்றிருத்தற் கெதிரே தோன்றும்
ஆத்தான மண்டபமும் மால்வி மானத்
தருகுலாங் காவணமண் டபமு மார்க்கும்
மாத்தான மானகோ புரநீள் முத்தி
வாசல்விழா மண்டபமும் வகுத்தல் செய்தான்
காத்தான முகிலெனவந் துதவு மெங்கள்
காவைவட மலையப்பன் கருணை மாலே.

[தொடரும்.]

---

38 வெளிப்பந்தல்மண்டபமும், பெரியகோபுரவாசல்மண்டபமும், அதற்கடுத்த முன்முகப்புமண்டபமும், பரமபதவாயிலுக்குத் தெற்கேயடுத்துள்ளமண்டபமும் நவதிருப்பதி இராமாநுஜஜீயர் அழகாய்க் கட்டினர்.

39 வீரப்பநாயக்கர்குலத்துதித்த குமாரசாமி என்பார், கொங்கணியன் குறட்டைச்சூழ்ந்தமண்டபத்தை உயர்த்திக் கட்டினர். கிருஷ்ணப்பநாயக்கரென்ற வீரப்பர் கி. பி. 1573—95. அவர்மகன் குமாரசாமிநாயக்கர் கி. பி. 1595-1602.

40 காவைவடமலையப்பர் முன்பத்துமண்டபத்தின் முன்புள்ள ஆத்தானமண்டபத்தையும் பெருமாள்விமானஞ்சூழ்ந்த பந்தல்மண்டபத்தையும் பரமபதவாயிலுக்கு வடக்கேயுள்ள மண்டபத்தையும் கட்டினர்.

பழையகொள்கை அழிந்தது.

[உயர்திரு. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L.]

பழையகாலத்தில் வாழ்ந்துவந்த மக்கள் நம்பிவந்த சில செய்திகளைக் கேட்டால் நமக்கு இக்காலத்தில் ஆச்சரியமாக இருக்கிறது. உதாரணமாக: சந்திரனையும் சூரியனையும் பாம்பு விழுங்குவதால் கிரகணம் ஏற்படுகிறது என்றும், அப்படி விழுங்கிய பாம்பு மீண்டும் அவைகளை உமிழ்வதால் கிரகணம் விட்டுப்போகிறது என்றும் பழங்காலத்தவர் நம்பிவந்தார்கள். அவர்கள் நம்பிவந்த மற்றொரு செய்தி இவ்வளவு விசித்திரமானதன்று; ஆனால் உண்மையில் இதைக்காட்டிலும் தவறானது.

கோடானுகோடி நக்ஷத்திரங்கள்கொண்ட மிகப்பிரும்மாண்டமான இப்பிரபஞ்சத்துக்கு நடுநிலையாக உள்ளது நமது பூமி என்றும் சூரியனும் சந்திரனும் உலகங்கள் யாவும் அதைச்சுற்றியே ஓடிவருகின்றன என்றும் நெடுங்காலமாகப் பழைய மக்கள் எண்ணிவந்தது இக்காலத்திலுள்ளவர்களுக்கு ஒரு விந்தையாகவே தோன்றுகிறது.

ஆதிகாலத்தில் வாழ்ந்த அறிஞர்களில் சிலர் இந்தப் பழங்காலக்கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை. இதற்கு உதாரணமாக அரிஸ்டார்கஸ் பைத்தாகொரஸ் என்னும் கிரேக்கர்களைக் கூறலாம். நமது நாட்டினராகிய ஆரியபட்டரும் பழையகொள்கையை மறுத்துவந்தார். ஆயினும் அவர்களுடைய கட்சி ஓங்கவில்லை. எகிப்துநாட்டில் மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த டாலமி என்பவர் 'பூமியே பிரபஞ்சத்தின் நடுநிலை' என்று கூறிவந்த கொள்கையே பெரும்பான்மையாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு வெகுகாலமாக உலகத்தில் நிலவிவந்தது.

ரயிலில் பிரயாணம் செய்யும் சிறுவனுக்கு அயலிலுள்ள மரம் செடி முதலியவை ஓடுவதுபோலவும் அவன் ஏறியுள்ள ரயில் நிற்பதுபோலவும் பிரமை ஏற்படும். ஆனால் அறிவுள்ளவன் குழந்தை மனத்தை உடையவனுயிருந்தாலன்றி அல்லது அரைகுறைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாலன்றித் தான் ஏறிய ரயில்வண்டி ஓடுகிறது என்பதையும் பக்கத்திலுள்ள வீடு முதலியவை நிற்கின்றன என்பதையும் தெளிவாகத் தெரிந்துகொள்வான். இதைப்போலவே பூமி நிலையாயிருப்பதுபோலவும் மற்றவைகளெல்லாம் அதைச்சுற்றி ஓடுவதுபோலவும் நமக்குப் பிரமை ஏற்படுவது இயற்கைதான். மனிதவர்க்கமானது, அறிவுப்படியின் பல துறைகளில் வெகுகாலம் குழந்தைப்பருவத்திலேயே இருந்தபடியால் பழைய கொள்கைகளை விடாமல் வெகுகாலமாகக் குழந்தைமனத்தோடு நம்பிவந்தது. ஐரோப்பாக்கண்டத்திலே அறிவைப்புகட்டி இந்தப் பழைய நம்பிக்கை அழிந்துபோவதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் கி. பி. பதினைந்து பதினாறும் நூற்றாண்டுகளில்வாழ்ந்த நிக்கலஸ் கோப்பர்னிக்கஸ் என்பவர். இவர் பழைய பிரஷ்யாநாட்டின் போலந்துப்பகுதியில் 475 வருஷங்களுக்குமுன் அதாவது கி. பி. 1473-ம் வருஷத்தில் பிறந்தார். அவர் பிறந்த ஊர் விஸ்டுலாநதிக் கரையிலுள்ள தார்ன் என்னும் சிறு நகரம். அவருடைய தந்தை செல்வம்மிக்க வியாபாரி.

சிறு வயதிலேயே அவருடைய திறமை வெளிப்படத்தொடங்கியது. அவருடைய ஆசிரியர்கள் யாவரும் அவருடைய அறிவை வியந்து பாராட்டினார்கள். அவருடைய தாய்தந்தையர்களுக்கு அவரை வைத்தியத்தொழிலில் அமரச்செய்யவேண்டும் என்பது ஆசை.

அவர் கிராக்கோ நகரத்திலுள்ள சர்வகலாசாலையிலே சில வருஷம் படித்தார். பிறகு இட்டலிநாட்டிலே பொலோணியாவிலும் ரோமாபுரியிலும் பாடுவாவிலும் பெர்ராராவிலும் உள்ள புகழ்

பெற்ற சர்வகலாசாலைகளில் பல கலைகளிலும் படித்துத் தேர்ச்சி பெற்றார். அப்போது அவருக்கு ஓவியக்கலையிலும் கணிதநூலிலும் திறமை அதிகமாக இருந்தது. கருத்தும் அவற்றிலேயே அதிகமாகச் சென்றது. ஆகையால் வைத்தியநூலைக் கற்பதில் அவருக்கு வரவரக் கருத்துக் குறைந்துகொண்டேவந்தது.

அவருக்குச் சுமார் முப்பதுவயதாயிருக்கும்பொழுது அவருடைய மனது ஒருவழியாகத் திடப்பட்டுவிட்டது. அப்போது அவர் வைத்தியத்தொழிலைக் கைவிட்டு விஞ்ஞான ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்.

பின்பு அவர் தம்முடைய மாமன் ஒருவருடைய உதவியால் மதபோதகராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பால்டிக் கடற்கரையிலுள்ள பிராவேன்பேர்க் என்னும் ஊரிலே மதபோதகராக நியமிக்கப்பட்டார். அந்த உத்தியோகத்திலிருந்து கிடைத்த ஊதியம் அவருடைய செலவுக்குப் போதியதாயிருந்தது. மேலும் அவர் மனம் நாடிய ஆராய்ச்சிகளை நிகழ்த்துவதற்கு வேண்டிய நேரமும் அந்த உத்தியோகத்தில் அவருக்கு இருந்துவந்தது.

அவர் கணிதசாஸ்திரத்தில் சிறந்த அறிவாளி என்றும் அதைப் போதிப்பதில் நிபுணர் என்றும் பெயரெடுத்தார். அவருடைய குணத்தை நேரில் அறிந்த மக்கள் அவரை நகர அதிகாரியாகவும் நீதிபதியாகவும் தேர்ந்தெடுத்துத் தங்களையே கௌரவித்துக்கொண்டார்கள். இதோடு அவரும் இடையிடையே வைத்தியராயும் சமூகச் சீர்திருத்தக்காரராயும் தொண்டுசெய்துவந்தார். ஆனால் அவர் செய்த தொண்டுகள் எல்லாவற்றிலும் வானசாஸ்திரத் துறையில் இயற்றிய தொண்டுதான் மிகச் சிறந்தது.

அவர் பல வருஷங்களாகச் செய்துவந்த ஆராய்ச்சிகளையும் எழுதிவந்த குறிப்புக்களையும் செய்துவந்த கணக்குகளையும் ஆதாரமாகக்கொண்டு ஒரு புதிய கொள்கையை அதாவது பூமியானது

மற்றக் கிரகங்களைப்போலவே சூரியனைச்சுற்றி ஓடுகிறது என்னும் கொள்கையைப் புத்தகவடிவமாக எழுதிப் பழைய கொள்கையை அடியோடு தகர்த்தெறிந்தார்.

ஆயினும், அக்காலத்திலுள்ள சமூகநிலையை உத்தேசித்துத் தாம் எழுதிய புத்தகத்தை அச்சிட்டு வெளியிட அவர் வெகுகாலம் தயங்கினர். என்றாலும், உயர்ந்த பதவியிலுள்ள தமது மதகுரு ஒருவர் அதை வெளியிடவேண்டும் என்று வற்புறுத்திய காரணத்தாலும், தாம் கண்ட உண்மையைத் தாம் கண்டறிந்தபடி வெளியிட வேண்டியது தம்முடைய கடமை என்னும் உணர்ச்சியாலும், ஆராய்ச்சியில் தமக்கிருந்த அவாவாலும் 'தம்முடைய கொள்கையைக் கேட்டபொதுமக்கள் முதலில் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள், தம்மீது கோபம்கொள்வார்கள்' என்று அவர் அறிந்திருந்தும் அந்த அச்சத்தைப் பொருட்படுத்தாமல் தம்முடைய கொள்கையை வெளியிடத் துணிந்தார்.

1553-ம் வருஷம் அவர் நோய்வாய்ப்பட்டுச் சாகுந்தறுவாயிலிருக்கும்போது அவருடைய முதற்புத்தகத்தின் அச்சுப்பிரதி அவர்கைக்கு வந்துசேர்ந்தது. அளவிறந்த பெருமையோடும் மகிழ்ச்சியோடும் அந்தப் புத்தகத்தைக் கையில் வாங்கிக்கொண்டார். தெளிவாகத்தெரியாத கண்களால் உற்றுநோக்கமுயன்றார். பெற்றபிள்ளையைப்போல் அளவிறந்தபாசத்தோடு அந்தப்புத்தகத்தைத் தடவிக்கொண்டிருக்கையில் அவருடைய ஆவி உடலைவிட்டுநீங்கி இறைவனடிசேர்ந்தது. ஆனல் அவர் முயன்று அறிந்து வெளியிட்ட உண்மை இன்றும் நம்மிடையே நிலவிக்கொண்டிருக்கிறது.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்... ...	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநூல் (5) இனியநாற்பது (உரை) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0

42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0

குறிப்பு:-ஸ்டாக்கிலில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 45 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணன்

மானேஜர்.